ISSN : 2456-821X.

# புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

-----------------------------------------------------------------------------------------------------------

==========================================================

## ஐங்குறுநூறு பாடல்களில் அண்மை விளி

==========================================================

**முனைவர் ம.கருணாநிதி,**

**தமிழ் உதவிப்பேராசிரியர்,**

**தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),**

**திருப்பத்தூர் – 635 601**

====================================================================

**முன்னுரை**

ஐங்குறுநூறு எட்டுத்தொகை என வழங்கும் தொகுப்பு நூல்களுள் ஒன்று. இதிலுள்ள பாடல்கள் சங்க காலத்தைச் சேர்ந்தவை. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் ஐந்து நிலம் சார்ந்த திணை ஒவ்வொன்றிற்கும் நூறு பாடல்கள் வீதம் இந் நூலில் ஐந்நூறு அகத்திணைப் பாடல்கள் உள்ளன. இது 3 அடி சிற்றெல்லை 6 அடி பேரெல்லை ஆகும். ஆசிரியப்பாவால் ஆன இந்நூலுக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார். ஐங்குறுநூற்றில் அடங்கியுள்ள பாடல்களில் ஒவ்வொரு திணையைச் சேர்ந்த பாடல்களும் ஐந்து வெவ்வேறு புலவர்களால் இயற்றப்படுள்ளன. ஆகமொத்தம் ஐந்து புலவர்கள் இவற்றை இயற்றியுள்ளனர். இதனைப் பின்வரும் பாடலால் நாம் அறியலாம்.

“மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதும் குறிஞ்சி கபிலர் - கருதிய
பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு.”

1. மருதத் திணைப் பாடல்கள்(100) - ஓரம்போகியார்

2. நெய்தல் திணைப் பாடல்கள்(100) - அம்மூவனார்

3. குறிஞ்சித் திணைப் பாடல்கள்(100) - கபிலர்

4. பாலைத் திணைப் பாடல்கள்(100) - ஓதலாந்தையார்

5. முல்லைத் திணைப் பாடல்கள்(100) - பேயனார்

இவ்வாறு ஐங்குநூற்றுப் பாடல்களைப் பாடியோர்களைப் பட்டியலிடலாம்.

**விளி – இலக்கணம்**

தமிழ் இலக்கண நூல்களில் முதன்மையான இலக்கணமான தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் அமைந்துள்ள வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு ஆகிய இயல்களில் விளிகள் குறித்துப் பார்க்கலாம். இதனைத் தொடர்ந்து நன்னூல் சொல்லதிகாரத்தில் விளி குறித்துப் பேசப்பட்டுள்ளது. தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் அமைந்துள்ள வேற்றுமையியல் ஏழில் முதல் இரண்டு நூற்பாக்களில் வேற்றுமை என்பது பொருளை வேறுபடுத்த வருவது என்றும் விளி வேற்றுமை விளி கொள்வதன் பொருட்டு எட்டாம் வேற்றுமையாக விளி வேற்றுமை வரும் என்று உரைக்கின்றது. இதனைத் தொல்காப்பியம்,

“வேற்றுமை தாமே ஏழென மொழிப

விளிக் கொள்வதன் கண் விளியோடு எட்டே” ( தொல். 63) என்கிறது தொல்காப்பியம்.

எட்டாவது வேற்றுமையான விளி வேற்றுமை பெயர் வேற்றுமை போன்று உருபற்ற வேற்றுமையாக வரக்கூடியதாகும். இந்த எட்டாம் வேற்றுமையை விளித்தல் வேற்றுமை, அழைத்தல் வேற்றுமை என்று குறிப்பிடுவதுண்டு என்கிறார் இதன் உரையாசிரியர் இளம்பூரணர். இனி ஐங்குறுநூற்றுப் பாடல்களில் விளி குறித்துப் பார்ப்போம்.

**ஏகாரம் அண்மை விளியேற்று வருதல்**

“துறைகெழு கொண்கன் நல்கி

உறைவுஇனிது அம்மஇவ் அழுங்கள் ஊரே. . . . ." (ஐங்கு.181) வெண்மணலில் குரவை ஆடும் துறையை உடையவன் கொண்கன். அவன் என்னைத் திருமணம் செய்துகொண்டு வாழ்வானாயின் எனக்கும் அலர் தூற்றும் ஊருக்கும் நல்லது.

பெருந்துறைக் கண்டு,வள் அணங்கி யோனே". (ஐங்கு.182)

காலை வரினும் களைஞரோ இலரே. . . . .ஐ183ஸ

கடல்அணிந் தன்றுஅவர் ஊரே

கடலினும் பெரிதுஎமக்கு அவருடை நட்பே"(ஐங்கு.184)

நரம்புஆர்த் தன்ன தீங்கிள வியனே"(ஐங்கு.185)

செல்வா தீமோ என்றனள் யாயே"(ஐங்கு.186) இதில் தாய் எனும் விளியெற்று யாய் எனவந்துள்ளது.

"புன்னை நுன்தாது உறைத்தரு நெய்தல்

பொன்படு மணியில் பொறப்த் தோன்றும்

மெல்லம் புலம்பன் வந்தென

நல்லன வாயின தோழியென் கண்ணே (ஐங்கு.189)

"பல்லிதழ் உண்கண் பனிசெய் தோனே"(ஐங்கு.190)

புன்னைப் பூவில் உள்ள பொன் நிறத் துகள்கள் நீல நிற நெய்தலில் கொட்டி, பொன்னில் பொதித்துள்ள மணிக்கல் போலத் தோன்றும் புலம்பு நிலத்தவன் புலம்பன். அவன் வந்துவிட்டான் என்று கண் அழுவதை விட்டுவிட்டு நல்லன ஆயின எனத் தலைவி தோழிக்குச் சொல்கிறாள்.ஐங்குநுறூற்றில் நெய்தல் பாடல்களைப்பாடியுள்ள அம்மூவனாரின் எல்லாப் பாடல்களிலும் ஏகாரம் பெற்று அண்மைவியேற்றுள்ளதைப் பார்க்கமுடிகின்றன.

**அண்மை விளியேற்று வருதல்**

"வாழி ஆதன் வாழி அவினி" (ஐங்கு.1)

ஐங்குறுநூற்றில் ஓரோம்போகியார் பாடிய மருதத்திணைப் பாடல்கள் அனைத்திலும் மேற்குறிப்பிட்ட வரி முதல் வரியாக விளியேற்று வந்துள்ளது.

- தாய், அரசன் நடுவுநிலை தவறாமல் தீர்ப்பு வழங்க வேண்டும்,
- தாய் உலகில் எல்லாரும் பசி, பிணி இல்லாமல் இருக்கோண்டும் என வேண்டிக்கொள்கிறாள். மகளோ,

- தாய் பசு பால் ஊறவேண்டும், உழும் எருதுகள் பெருகவேண்டும் என வேண்டிக்கொள்கிறாள். மகளோ,
- விளைச்சல் பெருகவேண்டும், நான் வழங்க இரவலர் மிகுதியாக வரவேண்டும் என வேண்டிக்கொள்கிறாள். மகளோ,
- தாய் நெல்லின் விளைச்சல் பெருகி பொன்வளம் சிறக்கவேண்டும் வேண்டிக்கொள்கிறாள். மகளோ, தன் கணவனும் அவனைப் பாதுகாக்கும் பாணனும் நலமுடன் வாழவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறாள்.
- தாய், மழை பொழிந்து வளம் கொழிக்க வேண்டும.

இவ்வாறு ஐங்குநுறூற்று மருதத்திணை வேழப்பத்து அனைத்துப் பாடல்களின் மையப்பொருளாவது தாய் மகளினை வளித்து உரைப்பதுபோல அமைந்துள்ளன.

“பழனக் கம்புள் பயிர்ப்பெடை அகவும்
கழனியுரநின் மொழிவல் என்றும்
துங்சுமனை நெடுநகர் வருதி
அஞ்சா யோஇவள் தந்தைகை வேலே.” (ஐங்கு.60)

இதில் ஊரன் என்பது அண்மையில் விளிக்கும் போது ஊர என வந்ததது. பழமையான வயல்களில் ஜபழனம்ஸ காட்டுக்கோழி ஜகம்புள்ஸ தன் பெண்கோழியைக் கூவி அழைக்கும் ஊரன் நீ. உனக்கு ஒன்று சொல்கிறேன் கேள். இவள் உறங்கும் அகன்றுயர்ந்த மனைக்கு இவளைப் பெற வருகிறாய். இவள் தந்தையின் கையிலிருக்கும் வேலைக் கண்டு அஞ்ச மாட்டாயா? ,து களவொழுக்கக் காலத்தில் தலைவன் வரவைத் தடுத்தது. ஐங்குறுநூறுஓரம்போகியாரின் மருதப்பாடல் - தோழி கூற்றுப் பத்து பகுதியில் அண்மைவிளி அமைந்துள்ளது.

“நல்லோர் நல்லோர் நாடி
வதுவை அயர விரும்புதி நீயே”. (ஐங்கு.61)

நல்லோர் நல்லோர் என அண்மையில் இருப்போரை அழைத்தலில் வந்துள்ளது.

**அன்னாய் என விளியேற்று வருதல்**

“உண்கண் பசப்பது எவன்கொல் அன்னாய்.” (ஐங்கு.21)

“நீயேன் என்றது எவன்கொல் அன்னாய” (ஐங்கு.22)

“தாக்கணங்கு ஆவ தெவன்கொல் அன்னாய” (ஐங்கு.23)

“நலங்கொண்டு துறப்பது எவன்கொல் அன்னாய” (ஐங்கு.24)

ஐங்குறுநூற்று நூலில் ஓரம்போகியார் படைத்த மருதத்திணை - கள்வன் பத்து பாடல்களில் அன்னாய் என அண்மை விளியேற்கும் பொருட்டு ஆய் எனும் அசைச்சொல் விளியேற்று வந்துள்ளது.

“அம்ம வாழி தோழி மகிழ்நன்”. (ஐங்கு.31, 32 33 37 38 40

“அம்ம வாழி தோழி நம்மூர்ப்” (ஐங்கு.34, 35)

அம்ம வாழி தோழி என்று தோழியை விளித்துத், தலைவி தன் கணவன் பிற மகளிருடன் வாழ்வதைச் சொல்லி அங்கலாய்த்துக் கொள்ளும் பாடல்கள் ,வை. அவன் மகிழ்நன் (மகிழ்ச்சியில் திளைப்பவன்) ஆகிவிட்டான். அவன் ஊரன் (ஊருக்கு உரியவன்) ஆகிவிட்டான். எனும் பொருண்மையில் வளிபெற்றுள்ளது ஐங்குறுநூற்று நூலில் ஓரம்போகியார் படைத்த மருதத்திணை தோழிக்கு விளித்த பத்துப்பாடல்களில் அண்மை விளிபெற்றுள்ளதை அறியமுடிகின்றன.

**அண்மைவிளியில் ஏகாரம் விளியேற்றல்**

“பசப்பணிந் தனவால் மகிழ்ந என் கண்ணே” (ஐங்கு.(45)

ஊர! உன் ஊரிலுள்ள ஆறு குளிர் காலத்தில் கலங்கி ஓடுகிறது. கோடை காலத்தில் தெளிந்து ஓடுகிறது. நீயும் அப்படிப் பரத்தையருக்கே பயன்படுகிறாய். எப்போது இங்கு வருவாய் என்று தலைவியின் சார்பாகத் தோழி விளித்துரைக்கிறாள். “எவ்வாய் முன்னின்று மகிழ்ந நின் தேரே.” (ஐங்கு.52) மகிழ்ந! (உடல் மகிழ்ச்சிஉயில் திளைப்பவன்) இங்கே இவள் தழையாடைக்காக வயலைக் கொடியைப் பின்னி, இவளது விரல்களும் சிவந்துவிட்டன. அத்துடன் இவளது சிவந்த வரியோடும் கண்களும், சிவந்த வாயும் உன் ஏக்கத்தால் வருந்துகின்றன. இப்படி இவளை விட்டுவிட்டு உன் தேரை யார் வீட்டுக்கு முன் நிறுத்தியிருந்தாய்? – தோழி வினவுகிளாள்.

**முடிவுரை**

எட்டுத்தெகைப் பனுவல்களில் குறிப்பாக ஐங்குறுநூறு பாடல்களில் விளி ஏற்புப் பாடல்களில் காணமுடிகின்றன. தமிழ் இலக்கண நூல்களில் முதன்மையான இலக்கணக்கான தொல்காப்பிய சொல்லதிகாரத்தில் அமைந்துள்ள வேற்றுமையியல் வேற்றுமை மயங்கியல் விளி மரபு ஆகிய இயல்களில் விழிகள் குறித்து இலக்கண வீதிகளைப் பார்க்கமுடிகின்றன. எட்டாவது

வேற்றுமையான விளி வேற்றுமை பெயர் வேற்றுமை போன்று உருபற்ற வேற்றுமையாக வரக்கூடியதாகும். அண்மை விளி ஏகாரம் பெற்று வந்துள்ளது. ஐங்குறுநூற்றில் தலைவி, தலைவன், தோழி என இவர்களுக்குள் நிகழும் உரையாடலிலும் இன்னபிற பாத்திரங்களின் உரையாடலிலும் அண்மை விளி மரபு இலக்கணத்தைப் பார்க்கமுடிகிறது. ஐங்குறுநூறு பாடல்களில் அண்மை விளி எட்டுத்தொகையில் குறிப்பாக ஐங்குறுநூற்றுப்பாடல்களில் அண்மை விளி, சேய்மையாகவும், புலம்பலாகவும் இடம்பெற்றுள்ளது.